[1st November 1962

தனிப்பட்டவர்களின் நிலங்கள் (ஏலத்திற்கு விடுதல்)

* *1070-எல் கேள்வி.—திரு. ஆ. கு. சுப்பையா : கனம் பொதுப் பணித்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்கு பதிலளிப்பாரா—*

ராமநாதபுரம் ஜில்லாவில் வரிகட்டவில்லை என்பதற்காக நிலத்தை ஏலம் போடப்பட்டு ஒரு ஏகரா ஒரு அணுவுக்கு சர்க்கார் சிப்பந்திகளே ஏலத்தில் எடுத்தது உண்மையா? விவரமென்ன ?

கனம் திரு. வெ. ராமையா : *இல்லை, ஐயா. எழவில்லை.*

Harijan Colonies (Dharmapuri Constituency)

* 1070-M *Q*.—SRI R. S. VEERAPPA CHETTIAR : Will the Hon. the Minister for Agriculture be pleased to state—

(*a*) the number of Harijan colonies proposed for Dharmapuri Constituency in the year 1961–62;

(*b*) the number completed;

(*c*) number of Harijan colonies proposed to be taken up in the year 1962–63 in the Dharmapuri Constituency; and

(*d*) the names of such places?

THE HON. SRI P. KAKKAN : (*a*) *to* (*d*) No Harijan colony was taken up for construction in Dharmapuri taluk in the year 1961–62. It is not also proposed to construct a Harijan colony in that taluk in the year 1962–63. But during 1960–61, 36 colonies were taken up in that taluk.

ஆற்று நீர் இறைக்கும் திட்டம்

* *1070-என். கேள்வி.—திரு. க. ர. நல்லசிவம் : கனம் பொதுப் பணித்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—*

திருச்சி மாவட்டம் கரூர் தாலூகாவில் காவிரியிலிருந்து பம்ப் செட் மூலம் தண்ணீர் இறைத்துக்கொள்ள 1962-ல் எத்தனை ஏக்கருக்கு அனுமதி கொடுக்கப்பட்டது ?

கனம் திரு. வெ. ராமையா : *பதினாறு ஏக்கர்கள்.*

திரு. க. ர. நல்லசிவம் : *இது, தனிப்பட்டமுறையில் உள்ளவர்களுக்கு கொடுக்கப்பட்டதா அல்லது கூட்டுறவு சங்கங்கள் என்ற அடிப்படையில் கொடுக்கப்பட்டதா ?*

கனம் திரு. வெ. ராமையா : *அந்த விவரம் என்னிடம் இப்பொழுது இல்லை.*

* *1070-ஓ. கேள்வி.—திரு. க. ர. நல்லசிவம் : கனம் பொதுப் பணித்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—*

(அ) சேலம் மாவட்டம் நாமக்கல், திருச்செங்கோடு, ஆகிய தாலுக்காக்களில் காவிரியிலுள்ள பம்ப் செட்டுக்கள் எத்தனை ?